**Advanced International Journal for Research (AIJFR)**

E-ISSN: 3048-7641 ● Website: www.aijfr.com ● Email: editor@aijfr.com

# வைரமுத்து பாடல்களில் மொழி ஆளுமை

**ச.குமரன் [1], முனைவர் கு.சந்திரன் [2]**

[1] ச.குமரன், முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி, திருவாரூர். (பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி இணைவுப் பெற்றது)

[2] முனைவர் கு. சந்திரன், இணைப்பேராசிரியர் மற்றும் ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறை, திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி, திருவாரூர். (பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி இணைவுப் பெற்றது)

நவீன கவிதை வடிவம் தோன்றி ஒரு நூற்றாண்டு எட்டிப் பிடிக்கப் போகிறது. கவிதை உலகில் மாபெரும் ஆளுமையாய் அறியப்படும் கவிஞர் வைரமுத்துவின் கவிதைப் பயணம் அரை நூற்றாண்டைத் தாண்டி இருக்கிறது. கவிதை மட்டுமல்லாமல், நாவல், சிறுகதை, கட்டுரை, வாழ்க்கை வரலாறு, மொழிபெயர்ப்பு என்று எல்லா இலக்கிய வடிவங்களையும் செம்மையாகச் செய்து இருக்கிறார். அவர் எந்த வடிவத்தில் இலக்கியத்தை தந்தாலும் கவித்துவம் ததும்பும் ஒரு மொழி நடையே தனது அடையாளமாக்கியவர். எந்த ஒரு இலக்கிய வகைக்கும் மொழிநடையும், அதை கையாளும் ஆளுமையும் மிக அவசியமானது. அவ்வகையில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் படைப்புகளில் அவருக்கே உரித்தான தனித்துவமான மொழி ஆளுமை குறித்து இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

### மொழி எனும் கலை

மொழி தான் மனிதனின் மிகச்சிறந்த தொடர்புக் கருவி. மு.வ. அவர்கள் மொழியைக் கலை என்று குறிப்பிடுகின்றார். “மொழி என்பது மக்கள் படைத்து காக்கும்

அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். குழந்தையின் மனவளர்ச்சியோடு ஒத்து வளர்ந்து வருவது மொழி வளர்ச்சியே ஆகும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராக உள்ளனர் மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே மொழியால் வளர் பவரும் மக்களே என்கிறார் .... ”[1] மு.வ அவர்கள்.

அந்த வகையில் மொழி என்னும் அரிய கலையை காலந்தோறும் பல்வேறு வகையில் வளர்ந்தும், அந்த அரிய கலையால் வளர்த்தும் வருகின்றனர். மொழி வரலாற்றை கூர்ந்து நோக்கும் போது ஒரு மொழி சிறந்த மொழி எனும் தகுதியை அதில் உள்ள வளமான இலக்கிய செல்வங்களே தீர்மானிக்கின்றன. முக்கிய வளம் மேம்பட்டு விளங்கும் மொழியே வளமான மொழி என்கின்றனர் மொழி அறிஞர்கள். அப்படி தமிழில் வளமான இலக்கியம் தந்த படைப்பாளர்கள் சீரும் சிறப்புமாக மொழியை ஆளுமை மிக்கதாக ஆக்கி உள்ளனர்.

காலம்தோறும் மொழியை வளர்த்து வரும் இலக்கிய கர்த்தாக்களுள் நவீன இலக்கிய உலகில் மாபெரும் ஆளுமையான கவிப்பேரரசு வைரமுத்து, மிகவும் குறிப்பிடத்தக்கவர். 2000ம் ஆண்டு காலத் தமிழை தன் கவிதை தோறும் சாறு பிழிந்து கொடுக்கும் எழுத்தாளுமை. இவரது பாடல்களில் மொழி எப்படியெல்லாம் ஆளப்பட்டுள்ளது என்பதை ஆய்ந்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

### வைரமுத்துவின் மொழி ஆளுமைக் கூறுகள்

வானம்பாடி இயக்கம் வழிவந்த எண்ணற்ற படைப்பாளுமைகளுள் கவிஞர் வைரமுத்துவும் ஒருவர். வானம்பாடி கவிஞர்களுள் மிக வளமான கற்பனையும், மரபுடன் ஆழமான தொடர்பும், கட்டற்ற கற்பனை வளமும் கொண்டவராக கவிஞர் வைரமுத்து திகழ்கின்றார். அவரது ஒவ்வொரு வரியிலும் தனித்துவமான, மொழி ஆளுமைப் பண்பு மிளுரும். இயற்கை, கற்பனை வளம், சங்கப் பாடல்களின் சாயல், உவமை அழகு, நாட்டுப்புற வழக்கு இப்படி அனைத்தும் செறிவாக சுவையாக தரக்கூடிய ஆற்றல் கவிஞருக்கு இயல்பிலேயே வாய்த்திருக்கிறது. இயல்பாகவே அவரது மன அமைப்பு சிந்தனைகளின் போக்கு நம்பிக்கை

மிகுந்த பாடல் வரிகளை நமக்கு தருகின்றன. அரை நூற்றாண்டுகளாக மக்களின் உள்ளங்களை அழகான பாடல்களால் ஆட்சி செய்யும் கவிஞரின் மொழி ஆளுமைப் பண்புகளை ஒவ்வொன்றாக காண்போம்.

**சிறப்பான சொல்லாட்சி**

ஆளும் திறமை என்பது அரியணைக்கு மட்டுமல்ல அது கவிஞரின் பாடல் வரிகளிலும் பரிணமிக்கும்.

"சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது
சொற் புதிது சோதிமிக்க நவக்கவிதை ...." [2]

என்பார் பாரதி. பாரதி இந்த அறுசீர் விருத்தத்தில் அழைத்த விடுப்பு தான், புதிய வகையான கவிதைக்கு எளிய சுவையான பல பாடல்களும் தூண்டுகோலாக அமைந்தது. சுவை புதிதாகவும், சொல் புதிதாகவும் வளம் புதிதாகவும் சிறப்பான சொல்லாளுமையோடு நவீன கவிதை இலக்கியம் செம்மாந்து வளர்ந்தது.

கவிஞர்கள் எத்தனை பேர் ஒரே பாடுபொருளை திரும்பத் திரும்ப பாடினாலும் பாடல்கள் சலிப்பை ஏற்படுத்துவதில்லை. பெரும்பாலும் காதல், இயற்கை, அரசியல் போன்ற உள்ளாக்கங்களை திரும்பத் திரும்ப பாடிக் கொண்டே இருக்கிறார்கள் தான். ஆனால் ஒரு கவிஞரின் பாடலைப் போல் இன்னொரு கவிஞனின் பாடல் இருப்பதில்லை. காரணம் பாடும் கவிஞரின் சொல்லாளுமை திறன் வேறுபடுகின்றது. வேறு வேறு வகை சுவையைத் தருகின்றன.

கவிஞர்கள் கையாளும் மொழித் திறன் வேறுபடுகின்றது எனவேதான் கவிஞர் ஷெல்லி

"Poetry is language, language is poetry…." [3]

என்கின்றார்.

இந்த மொழித்திறனை சொல்லாட்சியால் தம் பாடல்களில் மிகவும் சிறப்பாக கையாளுகிறார் கவிஞர் வைரமுத்து. அவரது வைகறை மேகங்களில் வெளிப்பட்ட சொல்லாட்சி புதுப்புது பரிணாமம் எடுத்து இன்று வரையிலும் நின்று ஆட்சி செய்கின்றன.

"வானம் எனக்கொரு போதி மரம்
நாளும் எனக்கது சேதிதரும்
ஒரு நாள் உலகம் நீதி பெறும்
திருநாள் நிகழும் தேதி வரும்
கேள்விகளால் வேள்விகளை....நான் செய்தேன் ...." [4]

என்ற பிரகாசமாகத் தொடங்கிய வைரமுத்துவின் சொல்லாட்சி இன்றைய அசாத்திய இடத்தை எட்டி இருப்பதைப் பார்க்கும் போது நம்மை மலைக்கச் செய்கிறது.

எளிமையான வலிமையான சொற் பயன்பாடு, சொல் அலங்காரம் தம் கவிதைகளில் அவர் பதிய வைத்திருந்த உயர்த் தன்மை இவை கவிஞரை தனித்து அடையாளம் காட்டின. தனக்கென தனி கவி அரசாங்கத்தையே நிறுவிக்கொண்டார். தமிழ்த் திரையுலகில் கண்ணதாசனுக்கு பிறகு இத்தனை அழகாய் அழுத்தமாய் காதலைச் சொன்ன கவிஞர் வைரமுத்துவே.

"பனிவிழும் மலர்வனம்
உன் பார்வை ஒருவரம்
இனி வரும் முனிவரும்
தடுமாறும் தனிமரம்....

சேலை மூடும் இளஞ்சோலை
மாலை மூடும் மலர் மாலை
இருபது நிலவுகள்
நகமங்கும் ஒளிவிடும்.... " [5]

என்பது போன்ற சொற்களால் வித்தை செய்யும் பாடல்கள் ஏராளம்.

**உவமை அழகு**

கவிஞர் தன் அழகான உணர்வுகளை மக்களிடையே கொண்டு சேர்க்க கையாலும் உத்தி முறையே அணி வகைகள். அவற்றுள் ஒன்றுதான் உவமை எனும் உத்தி. வைரமுத்து தனது பாடல்களில் பல்வேறு உவமைகளைக் கையாண்டுள்ளார் தண்டிய அலங்காரம் 24 வகை உவமைகளை பட்டியலிடுகிறது அதில் ஒன்பது உவமைகளை வைரமுத்து தமது பாடல்களில் எடுத்தாண்டுள்ளார். அவற்றுள் சிலவற்றை இங்கு காணலாம்.

**தொகை உவமை**

உவமை மறைந்து வர பாடலை அழகுப்படுத்தும் உத்தியை கவிஞர்கள் கையாளுவதுண்டு. இத்தகைய தொகை உவமை என்கிறது அணியிலக்கணம். உதாரணமாக

“கன்னிப் பொண்ணும் கண்ணுக்குள்ளே
கத்தி சண்டை கண்டாயோ
படபடக்கும் நெஞ்சுக்குள்ளே பட்டாம்பூச்சி
பார்த்தாயோ…..
இவன் மேகம் ஆக யாரோ காரணம் ….” [6]

என்ற பாடலில் நிறைய மறைந்து நின்று பொருள் தரக்கூடிய உவமைகளை எடுத்தாண்டிருக்கிறார்.

“கண்ணின் பார்வை கத்தி போல் வெட்டுவதாக” மறைத்து சொல்லும் ஓர் உவமை தான் “கண்ணுக்குள் கத்தி சண்டை கண்டாயோ” என்று தொடர். அதே போல் நெஞ்சு படபடப்பதை பட்டாம்பூச்சி படபடவென்று சிறகசைத்து பறக்கிறது என்ற உவமையை கொண்டு மறைத்துப் பாடலை அழகாக்குகிறார் கவிஞர். “இவன் மேகம் போல் மனம் நெகிழ்ந்து பொழிவதற்கு யாரோ காரணம்” என்று பொருளையும் தொகை உவமையைக் கொண்டே அழகுபடுத்துயிருகிறார்.

இப்படி எண்ணற்ற திரைப்பாடல்களில் இவ்வகையான உவமைகளைப் பயன்படுத்தி உள்ளார் வைரமுத்து.

**புகழ் உவமை**

பாடுபவரின் புகழை உவமையின் மையமாக வைத்து பாடுவது புகழ் உவமையாகும். திரைப்படம் எனும் கலைத்துறையில் கதாநாயக தலைமை, புகழ்ச்சி என்பது தவிர்க்க முடியாததாக இருக்கும். கதாநாயகர்களை முன்னிலை படுத்தும் பாடல்களில் புகழ் உவமை கவிஞர்களால் இயல்பாக பயன்படுத்தப்படுகிறது

எரிந்து போன சாம்பலிலிருந்து
எழுந்து பறக்கும் ஃபீனிக்ஸ் போல
மீண்டும் மீண்டும் பறப்பேன் உனக்கென்ன

என்ற பாடல் வரிகளில் “எரிந்து போன சாம்பலிலிருந்து எழுந்து பறக்கும் பீனிக்ஸ் போல” இந்த உவமை புகழை மையப்படுத்திய உவமை.

**சங்க இலக்கிய ஆளுமை**

சங்க இலக்கியம் என்பதே அழகின் ஊற்று சங்கச் சொற்றொடர்களை எடுத்தாள விரும்பாத கவிஞர்கள் கண்ணதாசன் முதல் இன்றைய நவீன திரைப்பட பாடல் பாடல் ஆசிரியர்கள் வரை எல்லா கவிஞர்களின் பாடல்களிலும் சங்க இலக்கியச் சாயல் இடம்பெறுவது இயல்பானது. அவ்வகையில் கவிஞர் வைரமுத்து சங்க இலக்கியத்தின் தொடர்களை செறிவாக நேர்த்தியாக தமக்கே உரிய சொல் ஆளுமைத் திறத்தால் பாடல்களில் கையாண்டு இருக்கிறார்.

“அற்றை திங்கள் அந்நிலவில்
நெற்றித்திரள நீர்வடிய கொற்றப்
பொய்கை ஆடியவள் நீயா….”[8]

இந்த பாடலில் வரும் “அற்றை திங்கள் அவ வெண்ணிலவின” என்ற வரி மிகவும் புகழ்பெற்ற புறநானூற்று பாடல் வரி. கடையேழு வள்ளல்களில் ஒருவரான பாரியின் மகள் பாடியதாக புறநானூற்றில் இடம்பெறும் வரிகள் இவை.

பெண்ணை கணவன் வீட்டுக்கு அனுப்பும் பெற்றோரின் நிலையை ஒரு கலித்தொகை பாடல் அழகாய் எடுத்துச் சொல்லும் மூங்கிலில் இருந்து பிறக்கும் இசை எப்படி அந்த மூங்கிலுக்கு சொந்தம் இல்லையோ அப்படி பெற்றெடுத்த பெண்ணை பெற்றோர் சொந்தம் கொண்டாடி தன்னுடனே வைத்துக் கொள்ள முடியாது. கணவரோடு வாழ அனுப்பத்தான் வேண்டும் என்ற பொருள்பட கலித்தொகை பாடல் அமையும் அந்த சாயலை அப்படியே ஒரு அழகான பாடலில் வைரமுத்து வைத்திருப்பார் கவிஞர்

"மூங்கில் விட்டுச் சென்ற பின்னே
அந்தப் பாட்டோடு மூங்கிலுக்கும் உறவு என்ன
பெற்ற மகள் பிரிகின்றாள்
அந்த பொண்ணோட தந்தைக்குள்ளே உரிமை என்ன…." [9]

என்ற பாடலில் ஒரு தந்தை தான் பெண் குழந்தையை சிசுவாக கையில் வாங்கிய நாளிலிருந்து வளர்த்து ஆளாக்கி ஒருவன் கையில் பிடித்துக் கொடுக்கும் நிலையை சங்க பாடல் உணர்த்தும் செறிவான பொருளில் வைத்துக் கூறியமை பாடல் ஆசிரியரின் ஆளுமை பண்பையே காட்டுகின்றது.

இப்படி எண்ணற்ற சங்க பாடல் தொடர்களையும், பொருள்படும் சாயலையும் தன் கவிதைகளில் எடுத்தாண்டுள்ளமை வைரமுத்துவின் மொழியாளுமைக்கு மிகச் சிறந்த சான்றாகின்றது.

**நாட்டுப்புற வழக்கு**

நாட்டுப்புற பாடல் தான் "மக்களின் பாட்டு" என்று நேரடியான புகழுரையை பெறுகின்றது. எல்லா இலக்கிய வடிவமும் மக்களுக்கானவை. மக்களிடம் இருந்து எடுத்து மக்கள் முன் வைக்கப்படுவது தான். ஆனால் நாட்டுப்புறப் பாடல் தான் மக்கள் வழக்கத்தில் பேசும் நடையில் நேரடியாக அமைகின்றது. அதனால் மக்களிடம் நெருக்கமாக சென்றும் சேர்ந்து விடுகின்றது. அத்தகைய சிறப்புமிக்க மக்கள் மொழியில் வைரமுத்து உள்ளம் கொள்ளை கொள்ளும் எண்ணிலடங்கா பாடல்களை வாரி வழங்கியுள்ளார்.

"அந்த நிலாவத்தான் நான் கையில புடிச்சேன்
என் ராசாவுக்காக…"

என்ற தொடரும் பாடல் முழுவதும் மக்கள் பேச்சு வழக்கில் பயன்படுத்தும் சொல்லாடலையே கையாண்டிருப்பார் கவிஞர்.

"மானூத்து மந்தையிலே
மாங்குட்டி பெத்த மயிலே
பொட்டபுள்ள பொறந்ததுன்னு
பொலிகாட்டில் கூவும் குயிலே….

நாட்டுக்கோழி அடிச்சி நாக்கு சொட்ட சமைச்சு
நல்லெண்ன ஊத்தி குடு ஆத்தா…
மேலு காலு வலிச்சா வெள்ளைப்பூண்டு ஒடிச்சு
வெள்ளம் கொஞ்சம் போட்டு குடு ஆத்தா…." [10]

போன்ற நாட்டுப்புற பாடல்களில், மக்களின் பேச்சு வழக்கு மட்டுமல்லாமல், மண் சார்ந்த வாழ்வியலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. பாடலுக்கு மேலும் உயிரூட்டக் கூடியதாக அமைகின்றது

**முடிவுரை**

வைரமுத்துவின் மொழியாளுமை கூறுகளாக பல சிறப்புகளை அவரது திரைப்பட பாடல்களில் காண முடிகின்றது. தனித்துவமான கற்பனை நயம், இயற்கையோடு இரண்டறக் கலந்து நிற்கும் மொழிப் பயன்பாடு, தனக்கே உரிய கவித்துவ நடை சொற்பயன்பாடு, சங்க மரபுப் பாடல்களை வழி மொழிந்தும், நவீன பாடல்களை முன்மொழிந்து மக்களின் மனங்களை ஆட்சி செய்யும் மொழி ஆளுமை பண்பு கவிஞர் வைரமுத்துவின் பாடல் முழுமையிலும் நிறைந்துள்ளது என்பதே இவ்வாய்வு கட்டுரை முடிவாக அமைகின்றது

**சான்றொன் விளக்கம்**

1. மு.வரதராசனார், மொழி வரலாறு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1954, ப.1.
2. பாரதியார், பாரதியார் கவிதைகள், நர்மதா பதிப்பகம், 2016, ப.87
3. அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக் கலை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1953, ப.61.
4. வைரமுத்து, ஆயிரம் பாடல்கள், சூர்யா லிட்ரேச்சர் பதிப்பகம், 2011, ப.624.
5. வைரமுத்து, ஆயிரம் பாடல்கள், சூர்யா லிட்ரேச்சர் பதிப்பகம், 2011, ப.720.
6. வைரமுத்து, ஆயிரம் பாடல்கள், சூர்யா லிட்ரேச்சர் பதிப்பகம், 2011, ப.731.
7. வைரமுத்து, ஆயிரம் பாடல்கள், சூர்யா லிட்ரேச்சர் பதிப்பகம், 2011, ப.802.
8. வைரமுத்து, ஆயிரம் பாடல்கள், சூர்யா லிட்ரேச்சர் பதிப்பகம், 2011, ப.725.
9. வைரமுத்து, ஆயிரம் பாடல்கள், சூர்யா லிட்ரேச்சர் பதிப்பகம், 2011, ப.810.
10. வைரமுத்து, ஆயிரம் பாடல்கள், சூர்யா லிட்ரேச்சர் பதிப்பகம், 2011, ப.614.